*(Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC.249/2022***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-1 (LW-1)***

*Name / Father's Name:* ***திரு.தனசேகர் த/பெ. சுப்ரமணி***

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **07.06.2024.**

துவக்க நேரம் 02.54

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது மல்லியகரையில் உள்ள அரசநத்தத்தில் குடியிருந்து, சென்ட்ரிங் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 06.03.2022ம் தேதி இரவு 10.30 மணியளவில் எனது வீட்டில் நான் இருந்தபோது, வெளியே நாய் கத்தும் சத்தம் கேட்டு நான் வெளியே வந்து பார்த்தபோது, ஆஜர் எதிரிகள் இருவரும் இருசக்கர வாகனத்தில் வந்திருந்தார்கள்.

2) ஏற்கனவே எங்களை எங்களது நிலத்திலிருந்து காலி செய்யச்சொல்லி எதிரிகள் பிரச்சனை செய்து வந்தார்கள். அதே பிரச்சனையை சொல்லி, எதிரி மாணிக்கம் கட்டையால், எனது காலிலும், பின்னங்கழுத்திலும் அடித்துவிட்டார். எதிரி மனோஜ்குமார், எனது மூக்கில் குத்தினார். நான் சத்தம் போடவே வீட்டிலிருந்து எனது மனைவி, பிள்ளைகள் வருவதை பார்த்து எதிரிகள் ஓடிவிட்டார்கள்.

3) அக்கம் பக்கம் இருப்பவர்கள் உதவியுடன் ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்தேன். நடந்த சம்பவத்தை குறித்து ஆத்தூர் அரசு மருத்துவமனையில் வைத்து, மல்லியகரை காவல் நிலைய

போலிசார், என்னிடம் மறுநாள் விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(அந்த புகார் வாக்குமூலத்தில் உள்ள புகார்தாரர் கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1) எனது அப்பாவுடன் பிறந்தவர்கள் தான் முனியப்பன், ரங்கநாதன் என்றால் சரிதான், ரங்கநாதன், முனியப்பன் எனக்கு பெரியப்பா ஆவார்கள். எதிரி மாணிக்கம், எனக்கு மாமா முறை என்றால் சரிதான். ஜெயலட்சுமிக்கு உடன் பிறந்த சகோதரர்கள் யாரும் இல்லை என்றும், ஜெயலட்சுமியின் சொத்துக்களுக்கு எதிரி மாணிக்கம் ஒருவர்தான் வாரிசு என்றும் சொன்னால் சரியல்ல.

2) எதிரியின் அப்பா பழனிசாமிக்கு, எனது பெரியப்பா முனியப்பன் அவரது பங்கு சொத்தினை விற்றுவிட்டார் என்றால் சரிதான். எனது பெரியப்பா முனியப்பன் பாகம் பிரிக்காத சொத்தினைத்தான் எதிரிக்கு விற்றுள்ளார் என்றால் சரிதான். எனது அப்பா மற்றும் மற்றொரு பெரியப்பா ரங்கநாதன் ஆகியோர்களும் அவர்களது பங்கு நிலத்தினை எதிரிக்கு விற்றுவிட்டார்கள் என்றும், ஆனால் மேற்படி விற்பனையை கிரயம் செய்துகொள்ளவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

3) மேற்படி நிலத்திற்கான பணத்தினை எதிரிகள் கொடுத்துவிட்டார்கள் என்றும், தற்போதுவரை அவர்களது பெயரில் எங்கள் தரப்பினர் கிரயம் செய்துகொடுக்கவில்லை என்றும், அதனால்தான் எங்களுக்குள் பிரச்சனை என்றும் சொன்னால் சரியல்ல.

4) எதிரிகளின் வீடு சேலத்தில் உள்ளது என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றும், ஏற்கனவே உள்ள

நிலப்பிரச்சனை காரணமாக எதிரிகள் மீது பொய்யான புகாரினை கொடுத்து, அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிகள், என்னை அடிக்கவில்லை என்றும், எதிரிகளால் எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 03.09

ஒம்/–S.அருண்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.

*(Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC.249/2022***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-2 (LW-2)***

*Name / Father's Name:* ***திருமதி.ரஞ்சிதா க/பெ. தனசேகர்***

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **07.06.2024.**

துவக்க நேரம் 03.10

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது மல்லியகரையில் உள்ள அரசநத்தத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 06.03.2022ம் தேதி இரவு 09.00-10.00 மணியளவில் எங்களது வீட்டில் நானும், எனது கணவரும் இருந்தபோது, வெளியே நாய் கத்தும் சத்தம் கேட்டு எனது கணவர் வெளியே சென்றார். சிறிது நேரத்திலேயே சண்டைபோடும் சத்தம் கேட்டது. நான் வெளியே சென்று பார்த்தபோது, ஆஜர் எதிரிகள் இருவரும், எனது கணவரை அடித்துக்கொண்டிருந்தார்கள். நான் சென்று சண்டையை விலக்கிவிட்டேன்.

2) எங்களது சத்தம் கேட்டு, அக்கம் பக்கம் இருப்பவர்கள் வருவதை பார்த்து எதிரிகள் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். எனது கணவருக்கு காலிலும், பின்னங்கழுத்திலும், மூக்கிலும் அடிபட்டிருந்தது. அவரை, ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கூட்டிச்சென்றேன். போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1) போலிசார், என்னை விசாரணை செய்தார்களா என்றால் செய்தார்கள். எனது கணவரை அடித்ததை நான் பார்த்ததாகவும், எனது கணவரை

அடிக்கும்போது நான் சென்று தடுத்ததாகவும், எனது போலிசார் விசாரணையில் சொல்லிக்கொள்ளவில்லை என்றால் நான் கதவை திறந்து சென்றபோது தான் எதிரிகள் அங்கிருந்து சென்றார்கள், சண்டையை நான் தடுக்கவில்லை.

2) எனது கணவர் ஒப்பந்த அடிப்படையில் தான் சென்டரிங் வேலை செய்கிறார் என்றால் சரிதான். எதிரிகளின் வீடு சேலத்தில் உள்ளது என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றும், ஏற்கனவே உள்ள நிலப்பிரச்சனை காரணமாக எதிரிகள் மீது பொய்யான புகாரினை எனது கணவர் மூலம் கொடுத்து, அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிகள், எனது கணவரை அடிக்கவில்லை என்றும், எதிரிகளால் எனது கணவருக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 03.19

ஒம்/–S.அருண்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.

*(Chapter XXII Code of Criminal Procedure.)*

*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC.249/2022***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-3 (LW-3)***

*Name / Father's Name:* ***திருமதி.சத்யா க/பெ. சிவக்குமார்***

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **07.06.2024.**
துவக்க நேரம் 03.20

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது கந்தசாமிபுதூரில் குடியிருந்து வருகிறேன். புகார்தாரர் தனசேகர், எனது பக்கத்து வீட்டுக்காரர் ஆவார். கடந்த 06.03.2022 ம் தேதி இரவு 09.00-10.00 மணியளவில் எங்களது வீட்டில் நான் இருந்தபோது, வெளியே சண்டைபோடும் சத்தம் கேட்டது. நான் சென்று பார்த்தபோது, ஆஜர் எதிரிகள் இருவரும், அங்கிருந்து இருசக்கர வாகனத்தில் சென்றார்கள். தனசேகரனுக்கு காலிலும், பின்னங்கழுத்திலும், மூக்கிலும் அடிபட்டிருந்தது. நான், அவரிடம் கேட்டபோது இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள் அவரை அடித்துவிட்டதாக என்னிடம் சொன்னார். தனசேகரை, ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கூட்டிச்சென்றார்கள். போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1) தனசேகர், ரஞ்சிதா ஆகியோர்கள் எனது பக்கத்து வீட்டுக்காரர்கள் என்றால் சரிதான். நடந்த சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். எதிரிகள் இருவரும் இருசக்கர வாகனத்தில் சம்பவ தினத்தில் சென்றதாக எனது போலிசார் விசாரணையில் சொல்லிக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன்.

2) நான் கேள்விபட்டதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றும், ஏற்கனவே உள்ள நிலப்பிரச்சனை காரணமாக எதிரிகள் மீது தனசேகர் கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக அவர்கள் கேட்டுக்கொண்டபடி நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள், தனசேகரை அடிக்கவில்லை என்றும், எதிரிகளால் தனசேகருக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 03.27

ஒம்/-S.அருண்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.

*(Chapter XXII Code of Criminal Procedure.)*

*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC.249/2022***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-4 (LW-4)***

*Name / Father's Name:* ***திரு.குமரேசன் த/பெ. ஆறுமுகம்***

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **07.06.2024.**

துவக்க நேரம் 03.28

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது கீரிப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 06.03.2022ம் தேதி இரவு சுமார் 09.00-10.00 மணியளவில் கோவில் விசேஷத்திற்காக சென்றுவிட்டு, அரசநத்தம் வழியாக வரும்போது, தனசேகர் வீட்டின் முன்பாக கூட்டமாக இருந்தார்கள். நான் சென்று கேட்டபோது, இருசக்கர வாகனத்தில் வந்த நபர்கள், தனசேகரை அடித்துவிட்டதாக பேசிக்கொண்டார்கள். தனசேகரை, ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு அங்கிருந்தவர்கள் சிகிச்சைக்காக கூட்டிச்சென்றார்கள். போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் கேள்விபட்டதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றும், ஏற்கனவே உள்ள நிலப்பிரச்சனை காரணமாக எதிரிகள் மீது தனசேகர் கொடுத்த

பொய்யான புகாருக்கு ஆதரவாக அவர்கள் கேட்டுக்கொண்டபடி நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள், தனசேகரை அடிக்கவில்லை என்றும், எதிரிகளால் தனசேகருக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 03.35

ஒம்/—S.அருண்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.